எம்.சி.ஓ.பி எண்: 234/2023 தேதி: 16.06.2025

மசா. : 1

பெயர் :பூபதி

த/பெ. : கோவிந்தசாமி

வயது :84

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து காண்பித்தார்கள். கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்தை நேரில் பாா்க்கவில்லை என்றால் சாிதான். விபத்து யாருடைய அஜாக்கிருதையால் நடந்தது என்று எனக்கு நேரடியாக தொியாது என்றால் சரி. விபத்தில் இறந்தவர் என் மகன். இருசக்கரவாகனத்தை என் மகன் ஓட்டிச்சென்றபோது விபத்து நடந்தது. அந்த இருசக்கரவாகனம் என் மகன் உடையது. விபத்து 04.11.2015 அன்று விபத்து நடந்தது. என் மகன் 02.07.2020 ல் தூக்குபோட்டு இறந்துவிட்டார் என்றால் சரி. அவர் இறப்பிற்கும் இந்த விபத்து காயம் காரணம் அல்ல என்றால் சரியல்ல. அவர் தனிப்பட்ட பிரச்சனையால் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் நான் கூறுவதுபோல விபத்தில் ஏற்பட்ட காயத்தினலோ, அதனால் ஏற்பட்ட மன உளைச்சலலோ இறக்கவில்லை என்றால் சரியல்ல. மணிமங்கலம் காவல் நிலையத்தில் பதியப்பட்டுள்ள வழக்கில் இந்த விவரம் எதுவும் கூறப்படவில்லை என்றால் தெரியாது. எனவே மனுதாரர் கோரும் இழப்பீடு பெறதக்கதல்ல என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.